# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

O.S.No.96/2021

**CNR.No.TNCB19000**

Date,11.08.2025 PW1

| பெயர் | வேலுச்சாமி | வயது | 59 |
|---|---|---|---|
| த/பெ | பழனிச்சாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காளியப்பனூர் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 11th August 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

அரசம்மாள் எனது அம்மா. வா.சா. ஆ 3 ஆவணத்தில் சர்வே எண்.168/3 சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ல் மொத்த பூமியின் அளவு சர்வே எண். 168/3 ஐயும் சேர்த்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.169/1 ல் கொடுத்துள்ள அளவு 7 ஏக்கர் 68 செண்ட் என்று வா.சா.ஆ 3 ல் சொல்லப்பட்டுள்ளது தவறு என்றால் அதுபற்றி சரியாக தெரியாது. மேற்படி 7.68 பூமியில்தான் க.ச.எண்.168/3 பூமியும் சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா. ஆ. 3 ஆவணத்தில் சரியான சர்வே எண். சரியான அளவுகள் குறிப்பிட்டிருந்தால் இந்த வழக்கே தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

வா.சா. ஆ 3 ல் ஏற்பட்ட தவறுதான் எங்களுக்கும் பிரதிவாதிக்கும் பின்னிட்டு ஏற்பட்ட அனைத்து ஆவணங்களிலும் ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா. ஆ 6 ஆவணத்தின்படி பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்ட 5.39 ல் க.ச.எண்.168/3 ல் உள்ள ஏக்கர் 2.49 பூமியும் சேர்ந்துள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பே அம்மாசை கவுண்டருக்கு 13-1/2 செண்ட் அளவிற்கு வண்டித்தடம் பூமி கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்தில் மேற்படி 13-1/2 செண்ட்ஐ கழித்து காட்டியிருக்கவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி தடத்திற்காக எனது தாத்தா மருதமலை கவுண்டர் கொடுத்த 13-1/2 செண்டிற்கும் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு மேபுறம் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி வண்டித்தடம் தாவா சொத்திற்கு கிழபுறம் தென்வடல் நீளமாக உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையின் வரைபடத்தில் எங்களுக்கும் பிரதிவாதிக்கும், வண்டித்தடத்திற்கும் அரசாங்க குட்டைக்கும் அம்மாசை கவுண்டருக்கு விற்கப்பட்ட ஒரு ஏக்கரா சொத்திற்கும் சேர்த்து மொத்தம் 7 ஏக்கரா 77-1/2 செண்ட் அளவுதான் பூமி உள்ளது என கண்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞரை கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான்.

மொத்தம் 8.89 ஏக்கர் பூமியில் 1 ஏக்கர் 12 செண்ட் குறைவாக உள்ளதாக ஆணையாளர் வரைபடத்தில் காண்பித்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் என்னிடம் சொன்னார்கள். மொத்த பூமிக்கும் வடக்கே உள்ள கிழமேல் மெயின் ரோட்டுக்காக எடுக்கப்பட்ட பூமியின் அளவு என்ன என்பதை பார்க்கவில்லை என்றால் சரிதான். 1.12 செண்ட் என்ன ஆனது என்றும் ஏன் அளவு குறைவானது என்றும் இன்றுவரை நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். நான் எனது பூமியை அளந்து வாங்கினேன். நாங்கள் 3-ம் தரப்பினரிடம் சொத்து வாங்கவில்லை எனது தாத்தா பூமியைதான் அனுபவித்து வருகிறோம் என்றால் எனது தாத்தாவிடம் விலை கொடுத்துதான் வாங்கினோம்.

வா.சா. ஆ 3 ஆவணம் பொய்யா என்றால் 2 ஏக்கர் எனது அப்பா எனது தாத்தாவிடம் பணம் கொடுத்து வாங்கினார். 50 செண்ட் பாகப்பிரிவினையில் எனது மாமா எனது அம்மாவிற்கு கொடுத்தார். மொத்த பூமியில் அளவு குறைவாக இருப்பதை தெரிந்தும் அதை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் யார் யாருக்கு எவ்வளவு அளவு என்பதை நிர்ணயம் செய்ய இயலவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர்அவரது அறிக்கையில் வாதி மற்றும் பிரதிவாதி சொத்துக்களை பற்றி பிரித்து காண்பித்திருந்தால் அது தவறு என்று சொன்னால் சரியல்ல. வாதியின் அளவு இன்னது பிரதிவாதியின் அளவு என்று சொல்லியிருந்தால் அதுவும் தவறு என்று சொன்னால் சரியல்ல.

வா,சா. ஆ . 6 ஆவணத்தில் க.ச.எண்.168/3 விடுபட்டுபோனதால்தான் வா.சா. ஆ 7 மற்றும் வா.சா.ஆ. 8 ஆவணங்களை எனது தாய்மாமா பழனிச்சாமியிடமிருந்து பிரதிவாதி எழுதி வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 பட்டா பாஸ்புத்தகத்தில் க.ச.எண்.169/1 என்றும் அதற்கு மட்டுமே பட்டா உள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.14 க.ச.எண்.169/2 க்குண்டான பட்டா வின் நகல் என்றால் சரிதான். அந்த பட்டாவில் எனது அப்பா, அம்மா பெயர் மற்றும் தாய்மாமா பழனிச்சாமி ஆகியோர்களின் பெயர்களில் உள்ள கூட்டுப்பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ.16 கணிணி சிட்டா க.ச.எண்.169/1-ஏ ஆவணத்தில் எனது தாயார் பெயர் இல்லையென்றால் சரிதான். பிரதிவாதி ராஜாமணியின் பெயர் உள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.16 ஆவணத்தில் அஜ்ஜண்ண கவுண்டர் மகன் ராமண்ண கவுண்டர் யார் என்றால் தாவா சொத்தின் ஆதி உரிமையாளராக இருக்கலாம் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.16 ஆவணத்தில் 8-வது நபர் அம்மாசை கவுண்டர் மகன் காளியண்ணன் இறந்து விட்டார். அவரது வாரிசுகள் இருக்கிறார்கள். க.ச.எண்.169/1-ஏ ல் நாங்கள் விற்பனை செய்த வண்டித்தடத்திற்காகதான் காளியண்ணன் பெயர் வருகிறது என்று சொன்னால் சரியல்ல. க.ச.எண்.169/1-ஏ கூட்டுப்பட்டாவில் காளியண்ணன் பெயர் கூட்டுப்பட்டா என்பதால் அவரது பெயர் வருகிறது என்றும் வண்டிப்பாதைக்காகதான் அவரது பெயர் வருகிறது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.16 ஆவணத்தில் உள்ள கூட்டுப்பட்டாதாரர்களை கட்சி சேர்க்காமல் அளக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.17 ஆவணத்தில் க.ச.எண்.169/1-ஏ என்ற சர்வே எண் மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.168/3 க்கு எந்த ஒரு வருவாய் ஆவணத்தையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். க.ச.எண்.168/3 பூமி முழுவதும் பிரதிவாதி ராஜாமணி பெயரில் உள்ளது என்றும் அவரது சுவாதீனத்திலும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. க.ச.எண்.168/3 ஐ பொறுத்து நீதிமன்ற ஆணையர் எனக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

க.ச.எண்.168/3 ஐ பொறுத்து பிரதிவாதி ராஜாமணி பெயரில் உள்ள தனிப்பட்டா எண்.758 உள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். உண்மையிலேயே க.ச.எண்.168/3 ல் எனக்கு உரிமை இருந்தால் எனது பெயரையும் சேர்க்க வேண்டும்

என வட்டாட்சியரிடம் மனு கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. க.ச.எண்.169/2 பட்டா எண்.1368-ன்படி பிரதிவாதி பெயருக்கு தனிப்பட்டா உள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். க.ச.எண்.168/2, 169/3 ஆகியவைகளுக்கு தனிப்பட்டா கொடுத்தது 1996 ல் பட்டாபாஸ் புத்தகம் கொடுத்த போது ஏற்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.33/2002 மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்து வா.சா.ஆ 18, மற்றும் 19 ன்படி பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரிதான்.

அதற்கு மேல் நான் மேல்முறையீடு செய்திருந்தேன் என்றால் சரிதான். 04.04.2022 ல் அந்த மேல்முறையீட்டு வழக்கு எண்.8/2021 அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை என்றால் சரிதான். அந்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பி. வா. சா. ஆ 1 .ஆகும். அந்த தீர்ப்புரையின் விபரங்களை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். க.ச.எண்.168/3 ன் மூல ஆவணங்களை கொடுக்காததால்தான் அந்த மேல்முறையீட்டு மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான வா.சா, ஆ. 10, 11 மற்றும் 12 -ன்படி க.ச.எண்.168/3 எனது தாத்தாவின் அப்பா ஆயி க்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்று உள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதி எனது தாய்மாமாவிடம் க.ச.எண்.168/3 ஐ பொறுத்து எழுதி வாங்கியுள்ள வா.சா. ஆ. 7, 8 ஆவணங்களினால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்துக்களை அளப்பதற்கு வட்டாட்சியர் அலுவலத்தில் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1988 ம் ஆண்டே மனு கொடுத்து அளந்து பாகம் பிரித்துக் கொண்டோம்.1988 க்கு பிறகு தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்தை அளக்க மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாவாவில் கேட்டுள்ள பரிகாரம் இரண்டுமே எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் தாவாவை தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.08.11 19:26:38 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.